நகரமன்றம் குடியாத்தம் நாள் : 22.08.2019

# அறிவிப்பு

2019–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26–ம் தேதிதிங்கட்கிழமைமுற்பகல் 11.00மணிக்குநகராட்சிஅலுவலகத்தில் உள்ளநகராட்சிதனிஅலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபொருள்களைமுடிவுசெய்யநகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்

**முன்னிலை:திரு.: எச்.இரமேஷ்,பி.எல்.,நகரமன்றதனிஅலுவலர்**

# கூட்டநிரல்

1. குடியாத்தம் நகராட்சிப் பகுதியில் Sustainable Water Security Mission 2019-20-ன் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி 280416/HgWing/DLC/SuWasem/2018 நாள் : 19.06.2019 மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.F.SuWasem/TWAD/RWS/Vellore நாள் : 02.07.2019-ன்படி இராபின்சன் குளத்திற்கு மழைநீர் சேகரிப்பு செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.00 இலட்சத்திற்கு அனுமதியும், அதில் 50% தொகை ரூ.12.00 இலட்சம் SuWasem நிதியிலிருந்தும்மீதி 50% தொகையான ரூ.12.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு மண்டல செயற்பொறியாளர், மண்டல இயக்குநரகம், வேலூர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மதிப்பீட்டுத் தொகையில் 50%தொகையான ரூ.12.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதி 2019-2010-ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.132/2019/இ1)

2. நகராட்சி பகுதிகளில் வைக்கப்படும் விளம்பர பலகைகள் அனுமதித்தல் சம்மந்தமாக "தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003" என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் விளம்பர பலகைகள் நிர்வகித்தல் சம்மந்தமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ல் புதிய சட்டப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவையும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது கீழ்கண்ட அரசாணைகள் மூலம் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தம் செய்து அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அ) மேற்கண்ட பொருள் சம்மந்தமான கீழ்காணும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. அரசாணை எண்.(4D) 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:05.06.2018.
2. அரசாணை எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:30.01.2019.
3. அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:31.01.2019.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்திருத்த அரசாணைகளில் பிரதானமாக கீழ்கண்ட சட்ட விதிகளில் திருத்தங்கள் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் விண்ணப்ப கட்டணம் ரூ.1000/- நிர்ணயித்துள்ளது
2. விளம்பர வரி என்ற வாசகத்தினை விளம்பர பலகை உரிமக் கட்டணம் என மாற்றி அமைத்துள்ளது
   இதன்படிக்கு நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் (3 ஆண்டிற்கு) உரிமக் கட்டணம்
   1) பிரதான மற்றும் பேருந்து தடச் சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.6000/-
   2) மற்ற சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.4000/-
3. வருடாந்திர வாடகை இந்நகராட்சி பொறுத்த மட்டில் பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/- இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.200/-
4. விளம்பர பலகைகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் / இடங்களில் மட்டுமே அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 285 ( I ) - ல் உள்ள தண்டணைக் கட்டணம் ரூ.10000/- உள்ளதை உயர்த்தி ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
6. மேற்கூறிய அனைத்துக் கட்டணங்களும் நகராட்சியில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவற்றின்படிக்கு இந்நகராட்சி பகுதிக்குள் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம்/இடங்களில் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி கோரும் தேர்வுகளில் கீழ்கண்ட விகித அடிப்படையில் வருடாந்திர வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-
2. இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.200/-

<u>அலுவலக குறிப்பு :</u>

1. நகராட்சியின் வருமானத்தினை பெருக்கிடும் நோக்கத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள சட்ட விதிகள் திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருதி மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. ஏற்கனவே மேற்படி விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் அடிப்படையிலும், விளம்பர பலகைள் அனுமதிக்கும் தருணங்களில் நகராட்சி பொறியியல் பிரிவில் அன்றைய தேதியில் அனுமதி அளிக்கும் கட்டிடத்தின் நிலைப்புறுதி குறித்த கருத்தினை பெற்று நகராட்சி கட்டிடத்திற்கு அனுமதி பெறும் நபர்கள் எவ்வித சேதமும் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுடன் இந்நகராட்சி சொந்தமான கட்டிடங்களின் மீது விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(ந.க.எண்.2420/2019/எப்1)

**3.** இந்நகராட்சியில் வருவாய் பிரிவு மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான படிவங்கள், எழுதுப்பொருட்கள் **2019–2020** ஆம் ஆண்டிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களில் இருந்து வாங்க ஆகும் தோராய செலவு ரூ.**2.00** லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**0676**/பி**4**/**2018**)

**4.** இந்நகராட்சிக்கு சொந்தமான TN23CZ **3137** ஈப்பு வாகனம் டயர்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் பழுதடைந்து இயக்க சிரமமாக உள்ளதால் மேற்காணும் வாகனத்தை "ஜெயின்கார்ஸ், வேலூர் " நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்ய ஆகும் தொகை ரூ.**1,22,166/–**க்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** **1.** மன்றம் அனுமதி வழங்கலாம். **2.** பணியின் அவசியம் கருதி முன் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ**1**/**1956**/**2019**)

**5.** கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ளி உரக்கிடங்கில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்க அவ்விடத்தில் மண் பரிசோதனை "தந்தைபெரியார் அரசு தொழிற்நுட்ப கல்லூரி, வேலூர்" மூலமாக செய்வதற்கு ஆகும் கட்டண தொகை ரூ.**53,100/–**க்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** **1.** மன்றம் அனுமதிக்கலாம். **2.** மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ**1**/**1056**/**2018**)

6. இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 30.06.2019 ஒய்வு பெற்றவரும், மற்றும் இந்நகராட்சி பயனியர் விடுதி காவலராக பணிபுரிந்து 25.05.2018 அன்று பணிகாலத்தில் காலமான பணியாளருக்கும், அவர்களது கணக்கில் உள்ள சிறப்பு சேமநல நிதி சந்தாத் தொகை, வட்டி மற்றும் நகராட்சி பங்குத்தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பணியாளரின் வாரிசு பெயர் | தற்போது வழங்க வேண்டிய தொகை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | சிறப்பு சேமநல நிதித் தொகை | வட்டி | நகராட்சி பங்குத் தொகை | மொத்தம் |
| 1. | திரு.டி.நடராஜன் நகராட்சி பயனியர் விடுதி காவலர் | திருமதி.N.சாந்தி / D.நடராஜன் | 2,960 | 29,834 | -- | 32,794 |
| 2. | திருமதி.லட்சுமி / லட்சுமணன் | -- | 2,960 | 32,679 | 10,000 | 45,639 |

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7682/2014/அ5)

7. இந்நகராட்சிக்கு சொந்தமான TN23CZ3137 ஈப்பு வாகனத்திற்கான காப்பீடு ஜூலை 2019 உடன் முடிவடைவதால் மேற்காணும் காப்பீட்டினை புதுப்பிக்க ஆகும் தொகை ரூ.29,111/-ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு :</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மூணியின் அவசர அவசியம் கருதி முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ1/2137/2019)

8. 2019 வேலூர் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்உத்தரவிற்கிணங்க, இந்நகராட்சி பகுதியில் 100% வாக்களிக்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பதாகைகள் (ம) பேனர்கள் அச்சடிக்க ரூ.3000/-, துண்டு பிரசுரம் அச்சடிக்க ரூ.5000/-, Hot Balloon பறக்கவிட ரூ.55,000/- என செலவு செய்ய வேண்டி உள்ளதால் தோராய செலவினம் ரூ.70,000/-க்கு மன்ற முன் அனுமதி கோரப்படுகிறது.

அவசர அவசியம் கருதியும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால், தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி செய்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்.413/2019/எப்1)

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரை 2506 தெருவிளக்குகள் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நலன் கருதி தெரு மின்விளக்குகளை அவ்வப்போது பழுதுகளை சரி செய்ய மின் உதிரிப்பொருட்கள் 2019-20 ஆம் ஆண்டின் பொது நிதியிலிருந்து ரூ.7,56,953/-க்கு கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடி, வேலூர் மூலம் கீழ்காணும் மின்உதிரி பொருட்கள் சப்ளை செய்ய மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

1. 40W Tube Light = 2500 Nos
2. 40W Tube Light Starter = 2500 Nos
3. 40W Tube Light Copper Choke = 1000 Nos
4. 40W Tube Light Holder = 2500 Nos
5. PVC Tape roll = 400 Nos
6. Hookup Wire = 15 Coils
7. 1/18 Copper PVC Insulated Wire = 6 Coils
8. 3/20 Copper PVC Insulated Wire = 3 Coils
9. 3/20 Aluminium PVC Insulated Wire = 8 Coils
10. 7/16 Aluminium PVC Insulated Wire = 3 Coils
11. 32 A Fuse Carrier = 50 Nos
12. 63 A Fuse Carrier = 50 Nos
13. 18W LED Bulb = 1000 Nos
14. LED Bulb holder(Pattern type) = 250 Nos
15. 90W LED Fittings = 15 Nos

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.2019-20 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் கீழ் பொதுநிதியிலிருந்து சப்ளை செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: இ1/399/2017)

10. இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் இருந்து வந்த 10KVA Kelcom UPS பழுதடைந்து இயங்காமல் அலுவலக கணினிப் பணிகள் தொடர்ந்து செய்ய பாதிப்பு ஏற்பட்டது. மேலும் மேற்படி அலுவலகப் பணிகள் பாதிப்பு ஏற்படாத வண்ணம் இருக்க மேற்படி 10KVA Kelcom UPS-ஐ பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர UPS பழுதுபார்க்க நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S.Thirumalai Power System - அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி மேற்படி பணியினை செய்து முடித்தமைக்கான தொகை ரூ.35,000/- வழங்கிடவும் மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/2078/2019

11. இந்நகராட்சியில் ஓட்டுநர் பணியில் சேர்ந்து தொடர்ந்து 20 ஆண்டுகள் ஓட்டுநராக மாசற்ற முறையில் விபத்துகள் இன்றி பணி செய்தவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜெ3 நாள் : 10.06.2019–ன்படி, பரிந்துரை செய்த திருவாளர்கள் திரு.கா.வாசு, திரு.எம்.ரமேஷ் மற்றும் திரு.ப.உமாசுதன் 3 ஓட்டுநர்களுக்கு தலா 24 கேரட் கொண்ட தங்கப்பதக்கம் வழங்க பரிந்துரை செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தங்கம் வழங்க தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் கூட்டுறவு சங்கம் மூலம் சுயவிவர பட்டியல் கோரியதில் தற்போதைய விலை விவரப்படி தலா 24 கேரட் கொண்ட தங்கப்பதக்கம் 1–க்கு ரூ.17,850/– வீதம் மொத்தம் 3 தங்கப்பதக்கங்களுக்கு ரூ.53,550/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேலும் தங்கப்பதக்கம் வாங்கும் நாளன்று அன்றைய தங்கத்தின் விலைக்கேற்ப ஏற்படும் வித்தியாச தொகையினை நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தங்கப்பதக்கங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.55,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1425/2019/சி1)

12. ஒப்புநோக்கு பட்டியல் – பணியின் பெயர் : குடிநீர் பணிகள் – குடியாத்தம் நகராட்சி – வினாயகர் சதுர்த்தி விழா முடிந்தவுடன் குடியாத்தம் நகரத்தில் வைக்கப்பட்ட வினாயகர் சிலைகளை நெல்லூர்பேட்டை ஏரியில் கரைக்கும் பணிக்கு விலைப்புள்ளி வரப்பெற்றதன் பேரில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | ஸ்ரீ அம்மன் கான்ட்ராக்டர்ஸ் | எஸ்.முருகன் | சுரேஷ் கன்ஸ்ட்ரக்ஷன் |
|---|---|---|---|---|
| 1 | பேரிகாட் 03.09.2019 முதல் 07.09.2019 வரை சவுக்கு கொம்பு ஏற்று கூலி, இறக்கு கூலி உள்பட | 5400.00 | 5500.00 | 5500.00 |
| 2 | Focus Light 12 எண்கள் | 10800.00 | 10900.00 | 10900.00 |
| 3 | JCB இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டிய இடத்தல் 02.09.2019 முதல் 07.09.2019 வரை டிராக்டர் வண்டியின் மூலம் தண்ணீர் நிரப்ப 90 லோடு தண்ணீர் தேவைப்படுகிறது. | 47520.00 | 47650.00 | 47850.00 |
| | மொத்தம் | 63720.0 | 64050.00 | 64250.00 |

சமர்பிக்கப்படுகிறது

விலைப்புள்ளி வரப்பெற்றதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.ஸ்ரீ அம்மன் கான்ட்ராக்டர்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களின்விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

13. இந்நகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு பணிகள் DBC நபர்கள் மூலமாக டெங்கு தடுப்பு பணியில் ஜூலை – 2019 முதல் ஜனவரி – 2020 வரையிலான காலங்களில் ஈடுபடுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.31.00 லட்சத்தினை அனுமதிக்க மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** இந்நகராட்சிப் பகுதியில் ஆங்காங்கே டெங்கு நோய் காணப்படுவதால் அதனை தடுப்பதற்கு தடுப்பு பணிகளை செய்ய DBC நபர்கள் ஈடுபடுத்தி தடுப்பு நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.E2/8441/2016 நாள்.25.07.2016-ல் Fixation of Rates 2016-2017ம் ஆண்டின் படி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.254/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபடி 01.07.2019 முதல் 31.01.2020 வரையில் DBC நபர்களை டெங்கு தடுப்பு பணியில் ஈடுபடுத்தி வருவதை மன்ற அனுமதிக்கலாம். அதற்கான செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.431/2012/எச்1)

**தனிஅலுவலர் / ஆணையர்,**
**குடியாத்தம் நகராட்சி.**